# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2017

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

1) **தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. நடைமுறை வாழ்வில் என்றும் வீட்டிலே தமிழைப் பேணவேண்டும் எனக் கூறியவர்

அ) அம்பி ஆ) இரவி

இ) சாலைஇளந்திரையன் ஈ) உதயைவீரையன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. **பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும்** என்ற பழமொழி விளக்குவது

அ) பட்டறிவின் பயனை ஆ) ஏமாற்றி அழிக்கும் செயலை.

இ) இணைவின் பயனை ஈ) போலித்தோற்றத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தமிழகத்தில் படையுதவி பெற்ற சிங்கள மன்னர்களில் ஒருவன்

அ) துட்டகெமுனு ஆ) அசேலன்

இ) அக்கிரபோதி ஈ) மகிந்தன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பின்வருவனவற்றுள் வினையால் அணையும் பெயர்

அ) நடிக்கிறான் ஆ) நடித்தான்

இ) நடித்தவன் ஈ) நடிப்பான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. யாழ்நூலகத்தின் முன்றலில் நிறுவப்பெற்ற படிமம்

அ) கலைமகள் ஆ) அலைமகள்

இ) மலைமகள் ஈ) திருமகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பன்னீராயிரம் சிங்களவரைச் சிறைப்பிடித்துக் காவேரிக்கு அணைகட்டிய மன்னன்

அ) கரிகாற்சோழன் ஆ) பராந்தகசோழன்

இ) குலோத்துங்கசோழன் ஈ) இராசராசசோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. "சாம்பல்மேட்டிலிருந்து ஒருநூலகம்." என எழுதியவர்

அ) எம். ஏ. நுஃமான் ஆ) ஏ. ஐ குணதிலக

இ) ஐசாக் தம்பையா ஈ) ஆர். இரங்கநாதன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. முகமதி என்பது

அ) உருவகவணி ஆ) உவமையணி

இ) உயர்வுநவிற்சியணி ஈ) தற்குறிப்பேற்றவணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. இலங்கையில் சோழராட்சியின்போது புதிய தலைநகராக இருந்தது

அ) அநுராதபுரம் ஆ) பொலநறுவை

இ) தம்பலகாமம் ஈ) கந்தளாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. தன் வினைக்கோர் எடுத்துக்காட்டு

அ) கட்டினான் ஆ) எடுப்பித்தான்

இ) செய்வித்தான் ஈ) எழுதுவித்தான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பூவனம் என்பது

அ) காடு ஆ) தோட்டம் இ) பூஞ்சோலை ஈ) பாலைவனம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. தமிழகத்தை ஆரியம் முற்றாக மூடியிருந்த காலம்.

அ) தி. பி 12 ஆம் நூற்றாண்டு　　ஆ) தி.பி 14ஆம் நூற்றாண்டு

இ) கி. பி 14ஆம் நூற்றாண்டு　　ஈ) தி.பி 16ஆம்நூற்றாண்டு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

13. எல்லாளனுக்கு முன்னர் ஆட்சிசெய்த தமிழ்மன்னர்களில் ஒருவன்

அ) தாதிகன்　ஆ) புலகிதன்　இ) மாறன்　ஈ) சேனன்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

14. பின்வருவனவற்றுள் இடப்பெயர்

அ) பூ　ஆ) கடற்கரை　இ) நீலம்　ஈ) பொங்கல்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

15. **இல்** என்பது ______________ வேற்றுமை உருபு.

அ) 4 ஆம்　ஆ) 3 ஆம்　இ) 7 ஆம்　ஈ) 8 ஆம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

16. இலங்கையில் கண்ணகி வழிபாட்டைத் தொடக்கிவைத்தவன்

அ) கயவாகு　　ஆ) புவனேகபாகு

இ) சேரன்செங்குட்டுவன்　　ஈ) இளங்கோவடிகள்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

17. **“எம்தமிழர் மூதாதை, குன்றெடுத்த பெருந்தோளான்”** என்று பாவேந்தரால் புகழப்பட்ட மன்னன்

அ) எல்லாளன்　ஆ) பண்டாரவன்னியன்　இ) இராவணன்　ஈ) சங்கிலியன்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

18. மாற்றம் ஏதும் இன்றிப் புணர்வது

அ) தோன்றற் புணர்ச்சி　　ஆ) இயல்புப் புணர்ச்சி

இ) கெடுதற் புணர்ச்சி　　ஈ) திரிதற் புணர்ச்சி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

19. ஏழு நரம்புகளை உடைய வீணையின் இசை

அ) திறம் ஆ) துத்தம் இ) பண் ஈ) விளரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. **வேனிலான்** என்பது

அ) குறிப்புவினை ஆ) எதிர்மறைவினை

இ) எச்சவினை ஈ) தெரிநிலைவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. **"புல்லைப் புடுங்கி வைச்சேன்**

**புறவளவைத் தூத்து வைச்சேன்"** என்ற நாட்டார் பாடல்

அ) ஒப்பாரிப்பாடல் ஆ) தாலாட்டுப்பாடல்

இ) தொழிற்பாடல் ஈ) காதற்பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. இராமாயணத்தின் மூலம் தமிழின் இழிநிலைக்குக் களம் அமைத்தவன்

அ) கம்பன் ஆ) வான்மீகி இ) வசிட்டன் ஈ) இராமன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. உருபு ஏற்காத வேற்றுமைகள்

அ) 6 ஆ) 8 இ) 5 ஈ) 2

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. கண்ணகி கணவனை இழந்தது

அ) சேரநாட்டில் ஆ) சோழநாட்டில்

இ) பாண்டியநாட்டில் ஈ) பூம்புகாரில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. **குளத்தில் அழகான அல்லி மலர்ந்திருந்தது.**

இச்சொல்லியத்தில் இல்லாத சொல்லிய உறுப்பு

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. **பட்டிதொட்டி** என்பது

அ) அடுக்குமொழி ஆ) இணைமொழி

இ) இரட்டைக்கிளவி ஈ) அடுக்கிடுக்குமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. புகாரை ஆணாக உருவகித்துப் பாடியவள்

அ) மாதுரி ஆ) கண்ணகி இ) மாதவி ஈ) தேவந்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. மார்கழி என்ற மாதத்தின் தமிழ்ப் பெயர்

அ) சிலை ஆ) மீனம் இ) விடை ஈ) வேழம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. ட் என்ற மெய்யெழுத்தின் இன எழுத்து

அ) ங் ஆ) ஞ் இ) ன் ஈ) ண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. சாலை இளந்திரையனுடைய பாடலில் போற்றுதற்குரிய கல்

அ) சாமிக்கல் ஆ) சிற்பக்கல் இ) சூளைக்கல் ஈ) நடுகல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. யாழ் நூலகம் யாரால் வடிவமைக்கப்பட்டது ?

இந் நூலகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட ஆண்டு எது?

______________________________

______________________________

2. தலைக்கோல் என்பது என்ன?

______________________________

______________________________

3. மானிடா சொல் என்ற கவிதையில் இறைவனின் சார்பில் கவிஞர் கூறும் மறைபொருள் என்ன?

______________________________

______________________________

4. சோழர் இலங்கைமீது ஏன் படையெடுத்தனர் ?

______________________________

______________________________

5. இராவணனின் சிறப்பியல்புகள் இரண்டைத் தருக.

______________________________

______________________________

6. **“நானும் கொஞ்சம் ஏழையடி நடவு கொஞ்சம் செறுத்துப் போடு”** என்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

______________________________

______________________________

7. தரப்பட்டுள்ள (ஈழம்) வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களின் பெயர்களை எழுதுக.




அ) ____________________

ஆ) ____________________

இ) ____________________

ஈ) ____________________

புள்ளிகள் 10

**3) பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து பத்து வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

✯ இன்பத்தமிழே எங்கள் மொழியே
எங்கும் பரந்திருக்கும் இனிய மொழியே

✯ ஓயாது ஒலிக்கின்ற அலைகடலே நீயும்
ஒரு நாள் சினம் கொள்ளுவதேன்

✯ சாவுக்கே சாவுமணி அடித்தவரே
சாகாது எம் மனதில் நிலைத்தவரே

புள்ளிகள் 10

4) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழர்களே பெருமைப்படக்கூடிய ஒரு செய்தியை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். எகிப்திலுள்ள பிரமிட்டு தமிழர் கட்டியது என்பது மட்டுமல்ல பிரமிட்டு என்ற சொல்லே தமிழ்ச் சொல்லாகும். கி.மு 2600 இல் எகிப்தியத் தமிழினத்தவராகிய மாயர்களால் பிரமிட்டுகள் கட்டும் வேலைகள் தொடங்கப்பட்டன. இம் மாயர்கள் அமெரிக்காவில் வாழ்ந்த தமிழ் இனத்தவராவர். இவர்களே கி.மு 3113 இல் மாயன் ஆண்டுக் கணக்கைத் தொடக்கியவர்கள் என்றும் கூறப்படுகிறது. இடுதல் என்றால் புதைத்தல் என்பது பொருள். இறந்தவர்களைப் புதைப்பதால் இடுகாடு என்று அவ்விடத்திற்குப் பெயர் சூட்டப்பட்டது. பொதுமக்கள் இறந்தால் சிறுகுழியில் புதைத்து மேலே மேடு அமைப்பர். இது சிறு இடு எனப்படும். மன்னர்கள் போன்ற உயர்ந்தோர்கள் இறந்தால் பெரும் இடு அமைப்பர். இதுவே எகிப்தில் பிரமிடு என அழைக்கப்படுகின்றது. மெக்சிக்கோ நாட்டிலுள்ள பிரமிட்டுகளில் தமிழரின் கைவண்ணங்ளைக் காணலாம். தமிழர்கள் உலகின் பல பகுதிகளிலும் வாழ்ந்தவர்கள் என்பது மட்டுமல்ல தமிழ்மொழி பல மொழிகளின் தோற்றத்திற்குக் கரணியமாகவும் அமைந்துள்ளது. உலக மொழிகளுக்குப் பல சொற்களைக் கொடையாக அளித்துள்ளது. அது மட்டுமன்றி உலகின் தொல்நாகரிகமே தமிழருடையது.

1. தமிழ்மொழி உலகமொழிகளுக்கு எவற்றைக் கொடையாக அளித்துள்ளது?

2. இடுதல் என்பதன் பொருள் யாது?

3. தமிழரின் கை வண்ணங்களை எதில் காணலாம்?

4. மாயன் ஆண்டுக் கணக்கைத் தொடக்கியவர்கள் யார்?

5. பிரமிடு என்ற சொல் எவ்வாறு உருவாகியது?

புள்ளிகள் 10

## 5) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

கிடுகிடு :- ______________________

கல்விகேள்வி :- ______________________

பச்சைப்பசேல் :- ______________________

2. எடுத்துக்காட்டுத் தருக.

பால்வழு :- ______________________

இடவழு :- ______________________

திணைவழு :- ______________________

3. சொற்பொருள் தருக.

கிறங்கல் :- ______________ மிடறு :- ______________

பகர்தல் :- ______________ மாற்றான் :- ______________

சீற்றம் :- ______________ ஏவலர் :- ______________

4. பின்வரும் சொல்லிய வகைகளுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

செப்புச்சொல்லியம் :- ______________________

ஏவற்சொல்லியம் :- ______________________

வியங்கோள் சொல்லியம் :- ______________________

5. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

அ) உவமைத்தொடர் :- ______________________

ஆ) மரபுச்சொற்றொடர் :- ______________________

இ) அடுக்கிடுக்கு மொழி :- ______________________

புள்ளிகள் 15

## 6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

செய்யுந் தொழிலே தெய்வம் என்ற பழமொழிக்கிணங்க ஒவ்வொருவருக்கும் தான் செய்யுந் தொழிலில் விருப்பமும் ஈடுபாடும் இருத்தல் வேண்டும். இன்று மக்கள்தொகை அதிகரித்துச் செல்லும் அளவிற்கு வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதில்லை. இத்தகைய சூழலில் வாழ்க்கையைக் கொண்டு நடத்த வேண்டிய கட்டாயத்தில் எந்த வேலை என்றாலும் செய்வதற்கு மக்கள் அணியமாகிவிட்டனர். ஆனாலும் தாங்கள் விரும்பிய வேலை தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கமும் அவர்களுக்கு இல்லாமல் இல்லை. இதற்கு இன்னொரு கரணியமும் இருக்கலாம். அவர்களின் மேலதிகாரிகளினால் அவர்களுக்கு ஏற்படும் இடர்களும் இதற்குக் கரணியமாக இருக்கலாம். தொழில் செய்வோர் ஒவ்வொருவருக்கும் மேலதிகாரிகள் இருப்பார்கள். அவர்களுக்குப் பணிந்து அடங்கி நடக்க வேண்டிய சூழ்நிலை ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஏற்படுகின்றது. ஆனால் உழவுத் தொழில் செய்வோருக்கு இத்தகைய இடர்ப்பாடுகள் ஏற்படுவதில்லை. இதைத்தான் எமது வள்ளுவப் பெருந்தகையும்

***உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்***
***தொழுதுண்டு பின்செல் பவர்***

என்று உழவரின் சிறப்பை அழகாக விளக்கியுள்ளார்.

சுருக்கத்திற்கான குறிப்புகள் :

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

| புள்ளிகள் 05 |
|---|

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- **நாட்டார் பாடல்கள்**
  தோற்றம்
  நாட்டார் பாடல்கள் கூறும் செய்திகள்.
  உமக்குப் பிடித்த நாட்டார் பாடல்கள். ஏன்?

- **புலம் பெயர் தேசத்தில் தமிழ்க்கல்வி**
  தமிழ்க்கல்வியின் இன்றியமையாமை.
  நீர் தமிழ் படிப்பதன் நோக்கம்.

- **உமது தாயகம்**
  உமது தாயகத்தின் இன்றயநிலை.
  தாயகத்திற்கு நீர் ஆற்ற இருக்கும் பணி.

புள்ளிகள் 20